Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 42/2019**

**Deposition of PW.6 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உத்திரியமேரி | ஜாதி | : | |
| க/பெ | : | சவரிமுத்து | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கரிசல்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 50 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026.

(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சவரிதாஸ் உங்கள் மகன் என்றால் சரிதான். உங்கள் மகன் எந்த ஊரில் பிறந்தார் என்றால் கரிசல்பட்டியில் பிறந்தார். உங்கள் மகன் மீது தான் முதலில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிறப்பு சான்றிதழ் வாங்கி என் மகனிடம் கொடுத்ததை மதுரையில் கொடுத்த பிறகு என் மகன் மீது வழக்கு பதியப்பட்டது. கரிசல்பட்டிக்கு சார்பதிவாளர் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் முதலில் ஆத்தூரில் இருந்தது. தற்போது திண்டுக்கல் தாலுகா ஆபிசில் உள்ளது. எதிரிகள் பெயர் போலீசார் சொல்லிதான் தெரியுமா என்றால் சரியல்ல, அவரை நான் நேரடியாக பார்த்துள்ளேன், முன்பே தெரியும்.

போலீசார் சொல்வது போல் நீங்கள் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் உங்கள் மகனை இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்த்துவிடுவார்கள் என்று போலிசார் உங்களை மிரட்டியதால் போலிசார் கூறியதன் பேரில் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எந்த தேதியில், எங்கு வைத்து பணம் கொடுத்தீர்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் தேதி தெரியாது, ஆனால் தாலுகா அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். போலி சான்றிதழாக சொல்லும் பிறப்புச் சான்றிதழின் அசலை போலிசார் பெற்றுக்கொண்டார்களா என்றால் அது என்

மகனுக்கு தான் தெரியும். முதல் விசாரணையில் நீங்கள் சொல்லிய சங்கதிகள் யாவும் போலிசார் கூறியதன் பேரில் பொய் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor